## மத்திய மண்டலத்தில் ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதில் தஞ்சை டாப்... நாகை கடைசி!




**திருச்சி:** மத்திய அரசின் ஜல் ஜீவன் திட்டத்தை செயல்படுத்துவதில், 95.46 சதவீத குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்கி மத்திய மண்டலத்தில் தஞ்சாவூர் மாவட்டம் முதலிடத்தில் உள்ளது. நாடு முழுவதும் உள்ள வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் வகையில், ஜல் ஜீவன் திட்டத்தை 2019 முதல் மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் உள்ள 12,525 கிராம பகுதிகளைச் சேர்ந்த 1.25 கோடி வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்க இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. 2024-க்குள் அனைத்து வீடுகளுக்கும் நபர் ஒருவருக்கு நாளொன்றுக்கு 55 லிட்டர்குடிநீர் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தில் டிச.9-ம் தேதி வரை 97,01,565 வீடுகளுக்கு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதையொட்டி, இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக தமிழக அரசுக்கு, மத்திய அரசு கடந்த அக்டோபர் மாதம் விருது வழங்கி கவுரவப்படுத்தியுள்ளது. இதில், 100 சதவீத குடிநீர் இணைப்பு வழங்கிய மாவட்டமாக காஞ்சிபுரம், கன்னியாகுமரி, ராணிபேட்டை, வேலூர் ஆகிய 4 மாவட்டங்கள் உள்ளன. அடுத்தடுத்த நிலையில், மற்ற மாவட்டங்கள் உள்ளன. அந்தவகையில், மத்திய மண்டலத்துக்கு

உட்பட்ட டெல்டா மாவட்டங்களில் அதிகபட்சமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 4,21,955 குடியிருப்புகளில் 4,02,796 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது 95.46 சதவீதமாகும்.

இதேபோல, மயிலாடுதுறை மாவட்டத்தில் 2,02,629 குடியிருப்புகளில், 1,84,531-க்கும்(91.07%), திருச்சி மாவட்டத்தில் 4,73,330 குடியிருப்புகளில், 4,20,882-க்கும் (88.92%), அரியலூர் மாவட்டத்தில் 2,07,503 குடியிருப்புகளில் 1,73,960-க்கும்(83.84%), கரூர் மாவட்டத்தில் 2,04,464 குடியிருப்புகளில் 1,69,123-க்கும்(82.72%), திருவாரூர் மாவட்டத்தில் 3,05,169 குடியிருப்புகளில் 2,29,806-க்கும்(75.3%), பெரம்பலூர் மாவட்டத்தில் 1,48,348 குடியிருப்புகளில் 99,345-க்கும்(67.02%), புதுக்கோட்டை மாவட்டத்தில் 3,70,681 குடியிருப்புகளில் 1,87,811 க்கும்(50.67%) குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

குறைந்த அளவாக நாகை மாவட்டத்தில் மொத்தம் உள்ள 1,57, 427 குடியிருப்புகளில் 34,030 குடியிருப்புகளுக்கு மட்டுமே குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இது 21.62 சதவீதமாகும். கடலோர மாவட்டமான நாகையில் நிலத்தடி நீர்மட்டம் குறைவாக இருப்பதால், இத்திட்டத்தை செயல்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக நாகை மாவட்ட அதிகாரி ஒருவர் கூறும்போது, ‘‘கடலோர மாவட்டமான நாகையில்குடிநீர் பயன்பாட்டுக்கான நிலத்தடி நீர் கிடைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. இதனால், குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தஞ்சாவூர் மாவட்டம் கொள்ளிடம் ஆற்றில் இருந்து ரூ.1,700 கோடி மதிப்பிலான கூட்டுக் குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை விரைந்து செயல்படுத்த தீவிர முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது’’ என்றார்.

## மிக்ஜாம் புயல் பாதிப்பு | தமிழகம் வந்த மத்திய குழு தலைமைச் செயலாளருடன் ஆலோசனை



**சென்னை:** மிக்ஜாம் புயல் பாதிப்பை மதிப்பிட்டு, மத்திய அரசு நிவாரணத்துக்கு பரிந்துரைக்க, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் வந்துள்ள மத்திய குழுவினர், சென்னை தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் உடன் ஆலோசனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

சென்னை தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் துறை செயலாளர்கள் உடன் மத்திய குழு செவ்வாய்க்கிழமை மிக்ஜாம் புயல் வெள்ள பாதிப்புகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டது. இந்த ஆலோசனைக் கூட்டத்தின்போது, புயலால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்த வீடியோப் பதிவு திரையிடப்படுகிறது. ஏரிகள், சாலைகள், உட்கட்டமைப்புகள், பள்ளி, கல்லூரி வளாகங்கள், குடியிருப்புப் பகுதிகள், மின்கம்பங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புகளை விளக்கும் வகையில் இந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன.

இந்த மத்தியக் குழுவின் ஆய்வுக்குப் பின்னர்தான், சேதங்களின் அடிப்படையில் மத்திய அரசு நிதியை விடுவிக்கும் என்று கூறப்படுகிறது. எனவே, பாதிப்புக்குள்ளான பகுதிகளில் எடுக்கப்பட்ட

EVA STALIN IAS ACADEMY

வீடியோ பதிவுகள் மற்றும் புகைப்படங்கள் எல்லாம் மத்தியக் குழுவினரிடம் சமர்ப்பித்து அதுதொடர்பாக விளக்கம் அளிக்கப்படுகிறது. இந்த ஆலோசனைக் கூட்டம் முடிந்த பிறகு, மத்திய குழுவினர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாக சென்று ஆய்வு செய்யவுள்ளனர்.

இந்த மத்திய குழு இரண்டு குழுக்களாகப் பிரிந்து ஆய்வுக்கு செல்வதாக தகவல் வெளியாகி உள்ளது. மழை, வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இன்று மட்டும் நாளை என இரண்டு நாட்கள் கள ஆய்வு செய்த பிறகு, மீண்டும் தலைமைச் செயலகத்தில், மீண்டும் தலைமைச் செயலாளரை சந்தித்து பின்னர், மழை வெள்ள பாதிப்புகள், மற்றும் மீட்பு நிவாரணப் பணிகள் குறித்து மத்திய அரசுக்கு அறிக்கை சமர்ப்பிப்பார்கள். இந்த ஆய்வுக்குப் பின்னர், ஒரு வார காலத்துக்குள் அறிக்கை சமர்ப்பிக்க வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது. அந்த அறிக்கையின் அடிப்படையில், தமிழகத்துக்கு புயல் நிவாரண நிதியை மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் என்று கூறப்படுகிறது.

முன்னதாக, தேசிய பேரிடர் மேலாண்மை ஆணைய ஆலோசகர் குணால் சத்யார்த்தி தலைமையில் மத்திய குழு திங்கள்கிழமை மாலை சென்னை வந்தது. கடந்த டிச.4-ம் தேதி மிக்ஜாம் புயல் தாக்கியதில் சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. வரலாறு காணாத வெள்ளத்தால் குடியிருப்புகளில் தண்ணீர் புகுந்து பொதுமக்கள் கடும் சிரமத்துக்குள்ளாகினர். தற்போது ஒருசில இடங்கள் தவிர மற்ற பகுதிகளில் வெள்ள நீர் வெளியேற்றப்பட்டு, மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. தேங்கியுள்ள குப்பைகளை அகற்றும் பணி நடைபெற்று வருகின்றன. இதற்கிடையில், புயல் பாதிப்புக்கான இடைக்கால நிவாரணமாக ரூ.5060 கோடியை வழங்க வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் மூலம் வலியுறுத்தினார்.

STALIN IAS ACADEMY

இந்நிலையில், புயல் பாதிப்பை கடந்த வியாழக்கிழமை மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் பார்வையிட்டு, முதல்வரிடம் ஆலோசனை நடத்தினார். அப்போது, மத்திய குழுவை அனுப்பும்படி முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியிருந்தார். இந்நிலையில், தமிழகத்துக்கு மத்திய குழுவை அனுப்புவது தொடர்பாக, மத்திய உள்துறை அமைச்சகம் இதர துறைகளுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது. அதில், மிக்ஜாம் புயல் பாதிப்பை கண்டறிய மத்திய குழுவை அனுப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு புயல் சேதம் குறித்த இறுதி அறிக்கை அளித்ததும், மத்திய குழு பாதிப்பு குறித்த விரிவான மதிப்பீட்டை தயாரிக்கும். புயல் மிகக் கடுமையானதாக கருதப்பட வேண்டியதா என்பதை மத்திய குழு முடிவெடுத்து பரிந்துரைக்க உள்ளது குறிப்பிடத்தக்கது.

**சட்டப்பிரிவு 370 | தீர்ப்பு வழங்கிய 5 நீதிபதிகள் யார்?**

**புதுடெல்லி:** காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது செல்லும் என்று உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பி.ஆர். கவாய், சூரிய காந்த், கிஷண் கவுல், சஞ்சீவ் கன்னா அடங்கிய அரசியல் சாசன அமர்வு தீர்ப்பு வழங்கியுள்ளது.

**தலைமை நீதிபதி சந்திரசூட்:** மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், மும்பை உயர் நீதிமன்ற நீதிபதி, அலகாபாத் தலைமை நீதிபதியாக பணியாற்றிய சந்திரசூட், கடந்த 2016-ம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கடந்த 2022-ம் ஆண்டு நவம்பர் 9-ம் தேதி உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக அவர் பதவியேற்றார். அவரது தந்தை ஒய்.வி.சந்திரசூட் உச்ச நீதிமன்றத்தின் 16-வது தலைமை நீதிபதி ஆவார்.

**நீதிபதி கிஷண் கவுல்:** கடந்த 1982-ம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியைத் தொடங்கிய கிஷண் கவுல், கடந்த 1987-ம் ஆண்டு முதல் 1999-ம் ஆண்டு வரை உச்ச நீதிமன்றத்தின் ‘அட்வகேட் ஆன் ரெக்கார்ட்' ஆகப் பதவி வகித்தார். கடந்த 2003-ம் ஆண்டில் நீதிபதியாக பதவியேற்றார். கடந்த 2012-ம் ஆண்டில் டெல்லி உயர் நீதிமன்ற பொறுப்பு தலைமை

நீதிபதியாகவும் கடந்த 2013-ல் பஞ்சாப் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாகவும் பணியாற்றினார். பின்னர் சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி வகித்தார். கடந்த 2017-ம் ஆண்டு பிப்ரவரி 17-ல் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

**நீதிபதி சஞ்சீவ் கன்னா:** கடந்த 1983-ம் ஆண்டில் டெல்லி மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக சஞ்சீவ் கன்னா பணியைத் தொடங்கினார். பின்னர் டெல்லி உயர் நீதிமன்ற வழக்கறிஞராக பணியாற்றினார். கடந்த 2006-ம் ஆண்டில் டெல்லி உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார். கடந்த 2019-ம் ஆண்டில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். வரும் 2025 மே 13-ம் தேதி இவர் ஓய்வு பெறுகிறார்.

**நீதிபதி பி.ஆர்.கவாய்:** கடந்த 1987 முதல் 1990ம் ஆண்டு வரை மும்பை உயர் நீதிமன்றத்தின் நாக்பூர் கிளையில் வழக்கறிஞராக பணியை தொடங்கிய பி.ஆர். கவாய் கடந்த 2003-ம் ஆண்டில் மும்பை உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார். கடந்த 2019-ம் ஆண்டு மே 24-ம் தேதி உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். வரும் 2025-ம் ஆண்டு நவம்பர் 23-ம் தேதி அவர் ஓய்வு பெறுகிறார்.

**நீதிபதி சூர்ய காந்த்:** ஹரியாணாவின் ஹிசார் பகுதியை சேர்ந்த சூர்ய காந்த், கடந்த 1984-ம் ஆண்டில் மாவட்ட நீதிமன்றங்களில் வழக்கறிஞராக பணியைத் தொடங்கினார். பின்னர் பஞ்சாப் உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றினார். கடந்த 2004-ம் ஆண்டு பஞ்சாப் உயர் நீதிமன்ற நீதிபதியாக பதவியேற்றார். கடந்த 2018-ம் ஆண்டில் இமாச்சல பிரதேச உயர் நீதிமன்ற தலைமை நீதிபதியாக பதவி உயர்வு பெற்றார். கடந்த 2019-ம் ஆண்டு மே 24-ம் தேதி உச்ச நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். வரும் 2027-ம் ஆண்டு பிப்ரவரி 9-ம் தேதி அவர் ஓய்வு பெறுகிறார்.

## காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது சட்டப் பிரிவை நீக்கியது செல்லும்: உச்ச நீதிமன்றம் தீர்ப்பு

ஜம்மு காஷ்மீரின் சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்தது செல்லும் என்ற முக்கிய தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நேற்று வழங்கியதை தொடர்ந்து, ஸ்ரீ நகரில் பாதுகாப்பு படையினர்.

**புதுடெல்லி:** ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது சட்டப் பிரிவை நீக்கியது செல்லும் என்று உச்ச நீதிமன்றத்தின் அரசியல் சாசன அமர்வு தீர்ப்பளித்துள்ளது.

ஜம்மு காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது சட்டப் பிரிவில் திருத்தங்கள் செய்து, குடியரசுத் தலைவர் ஒப்புதலுடன் கடந்த 2019 ஆகஸ்ட் 5-ம் தேதி அரசாணை வெளியிடப்பட்டது. அதே நாளில் ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை நீக்க வகை செய்யும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அடுத்த நாளில், நாடாளுமன்ற பரிந்துரையை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் ஏற்றுக்கொண்டார். இதன்மூலம் ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது.

இதைத் தொடர்ந்து, 2019 ஆகஸ்ட் 9-ம் தேதி, ஜம்மு காஷ்மீரை 2 யூனியன்பிரதேசமாக பிரிக்க வகை செய்யும்காஷ்மீர் மறுசீரமைப்பு சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன்படி, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையுடன் கூடிய யூனியன் பிரதேசமாகவும், லடாக் பகுதி சட்டப்பேரவை இல்லாத யூனியன் பிரதேசமாகவும் உதயமாகின.

ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து நீக்கப்பட்டது, 2 யூனியன் பிரதேசங்கள் உருவாக்கப்பட்டதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் 32 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இதில் 9 பேர் மனுக்களை வாபஸ்பெற்றனர். இறுதியாக 23 பேரின் மனுக்கள் ஒரே வழக்காக விசாரிக்கப்பட்டது. முதலில் 3 நீதிபதிகள் அமர்வு விசாரித்தது. 2019 ஆகஸ்ட் 28-ம் தேதி5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வுக்கு வழக்கு மாற்றப்பட்டது.

வழக்கு விசாரணை கடந்த ஆகஸ்ட் 2-ம் தேதி முதல் தீவிரம் அடைந்தது. உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட்,

நீதிபதிகள் பி.ஆர்.கவாய், சூரியகாந்த், கிஷண் கவுல், சஞ்சீவ் கன்னா ஆகியோர் அடங்கிய அமர்வு வழக்கை விசாரித்தது.

மனுதாரர்கள் சார்பில் மூத்த வழக்கறிஞர்கள் கபில்சிபல், கோபால் சுப்பிரமணியம், ஜாபர் ஷா, ராஜீவ்தவாண், துஷ்யந்த் தவே, நித்யா ராமகிருஷ்ணன், கோபால் சங்கரநாராயணன் உள்ளிட்டோர் வாதாடினர்.

‘‘கடந்த 1947-ல் காஷ்மீர் மகாராஜா ஹரிசிங் - மத்திய அரசு இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது. அப்போது சட்டப் பிரிவு 370-ன்படி காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டது. இதன்படி, ஜம்மு காஷ்மீர் சட்டப்பேரவையின் ஒப்புதலுடன் மட்டுமே காஷ்மீருக்கான சட்டங்களை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியும். சட்டப்பேரவையின் ஒப்புதல்இல்லாமல் 370-வது சட்டப் பிரிவில் குடியரசுத் தலைவர் திருத்தம் செய்தது சட்டவிரோதம். சட்டப் பிரிவு 3-ன்படி, ஏற்கெனவே மாநில அந்தஸ்தில்இருக்கும் மாநிலத்தை யூனியன் பிரதேசமாக மாற்ற முடியாது’’ என்று வாதிட்டனர்.

**மத்திய அரசு விளக்கம்:** மத்திய அரசு சார்பில் அட்டர்னி ஜெனரல் வெங்கடரமணி, சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் கே.எம்.நடராஜ், உதவி சொலிசிட்டர் ஜெனரல் விக்ரம்ஜித் பானர்ஜி உள்ளிட்டோர் ஆஜராகி வாதாடினர். மத்திய அரசுக்கு ஆதரவாக மூத்த வழக்கறிஞர்கள் ஹரிஷ் சால்வே, ராகேஷ் திவேதி, கிரி, குருகிருஷ்ணகுமார், அர்ச்சனா உள்ளிட்டோரும் வாதாடினர்.

‘‘காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370-வது சட்டப் பிரிவு தற்காலிகமானது. இந்த பிரிவு நீக்கப்பட வேண்டும் என்பதை, இதை வரையறுத்த சட்ட நிபுணர்கள் தெளிவாக கோடிட்டு காட்டியுள்ளனர். எந்தவொரு முடிவை எடுக்கவும் குடியரசுத் தலைவருக்கு முழு அதிகாரம் இருக்கிறது. எல்லைபகுதி என்பதால் தற்காலிகமாக

யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டுள்ளது. விரைவில் மாநில அந்தஸ்து வழங்கப்படும்’’ என்று வாதிட்டனர்.

**3 விதமான தீர்ப்புகள்:** இந்நிலையில், 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன அமர்வு நேற்று தீர்ப்பு வழங்கியது. தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதிகள் பி.ஆர்.கவாய், சூரியகாந்த் ஒருமித்த கருத்துடன் தீர்ப்பளித்தனர். நீதிபதி கிஷண் கவுல்மாற்று கருத்துகளுடன் தீர்ப்பு வழங்கினார். நீதிபதி சஞ்சீவ் கன்னா 2 வகையான தீர்ப்புகளையும் ஆமோதித்தார்.

தீர்ப்பின் முக்கிய அம்சங்களை தலைமை நீதிபதி சந்திரசூட் வாசித்தார். அதில் கூறப்பட்டுள்ளதாவது:

இந்த வழக்கில் 3 விதமான தீர்ப்புகள் வழங்கப்பட்டும், மூன்றும் ஒருமித்த கருத்தையே கொண்டுள்ளன. ஜம்மு காஷ்மீரில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருக்கும்போது மத்திய அரசு எவ்வித முடிவையும் எடுக்க கூடாது என்ற மனுதாரர்களின் கருத்து நிராகரிக்கப்படுகிறது. ஒரு மாநிலத்தில் குடியரசுத் தலைவர் ஆட்சி அமலில் இருந்தாலும் மத்திய அரசு முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

1947-ல் இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்த காஷ்மீர் மகாராஜா ஹரிசிங், இந்திய அரசமைப்பு சாசனத்தை ஏற்பதாக அறிவித்துள்ளார். போர் சூழல்காரணமாகவே காஷ்மீருக்கு சிறப்புஅந்தஸ்து வழங்கப்பட்டது. வரலாற்றைபடித்தால் 370-வது சட்டப் பிரிவு தற்காலிகமானது என்பது தெளிவாகிறது. அதில் குடியரசுத் தலைவர் திருத்தம் செய்தது செல்லும். காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்து செய்யப்பட்டது செல்லும். இதற்கு காஷ்மீர் சட்டப்பேரவையின் ஒப்புதல் தேவையில்லை.

‘ஜம்மு காஷ்மீர் யூனியன் பிரதேசமாக மாற்றப்பட்டது தற்காலிகமானது. விரைவில் மாநில அந்தஸ்து வழங்கப்படும்’ என்று மத்திய அரசு உறுதி அளித்துள்ளது. எனவே, யூனியன்பிரதேசமாக

STALIN IAS ACADEMY

மாற்றப்பட்டது சட்டப்பூர்வமா, இல்லையா என்ற வாதம் தேவையற்றது. ஜம்மு காஷ்மீருக்கு விரைவில் மாநில அந்தஸ்து வழங்க வேண்டும். செப்டம்பர் 30-ம் தேதிக்குள் காஷ்மீர் சட்டப்பேரவைக்கு தேர்தல் நடத்த தலைமை தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டப் பிரிவு 3-ன்படி ஒரு மாநிலத்தை யூனியன் பிரதேசமாக மாற்ற வழிவகை உள்ளது. இதன்படி லடாக், யூனியன்பிரதேசமாக மாற்றப்பட்டது சட்டப்பூர்வமாக செல்லும்.

இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

**பிரதமர் மோடி பெருமிதம்:** இது வரலாற்று சிறப்புமிக்க தீர்ப்பு என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். அவர் தனது எக்ஸ் வலைதள பதிவில், ‘கடந்த 2019 ஆகஸ்ட் 5-ம் தேதி நாடாளுமன்றம் எடுத்த முடிவை உச்ச நீதிமன்றம் உறுதி செய்துள்ளது. இதன்மூலம், வளர்ச்சியின் அனைத்து பலன்களும் ஜம்மு காஷ்மீர் மற்றும்லடாக் பகுதி மக்களை வந்தடையும். 370-வது சட்டப் பிரிவால் பாதிக்கப்பட்டிருந்த நலிவுற்ற, ஒடுக்கப்பட்ட பிரிவினர் அனைத்து பலன்களும் பெறுவார்கள்’ என்று தெரிவித்துள்ளார்.

EVA STALIN